வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி வரு. (1889) ஆவணிமீ 28-ம் உ

அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - அஅ] யாழ்ப்பாணம் நள வரு புரட்டாதிமீ அ - உ வெள்ளிக்கிழமை (24 - 9 - 1976) [இல: உரு

## துன்பந் துடைக்கும் துர்க்கையே இன்பம் இயக்கும் இலக்குமியே
## கன்னித் தமிழ்காக்கும் கலைவாணியே வணக்கம்

# தெய்வச் செயல் இந்தத் திருப்பணி

முற்காலத்தில் கோயில்களை அரசர்களே கட்டி வந்தனர் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆலயத்திருப்பணி செய்வதில் மிகச்சிறப்படைந்தார்கள். அவர்களால் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களின் திருப்பணிகள் புதுப்பிக்கப்பெற்றன திருக்கேதீச்சரமும் தொடக்கத்தில் அவர்களாலேயே புதுப்பிக்கப்பட்டது.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என விளங்கும் இன்றைய நிலையில் நாட்டு மக்கள் அனைவரும இத்திருப்பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். அதித்து நிறைந்த செல்வமுள்ள கோயில்களின் வருவாயில் ஒரு பகுதியைத் திருப்பணித்திட்டத்துக்கென ஒதுக்கிப் பணவசதியில்லாத ஆலயங்கட்கு வழங்க வேண்டும். இலங்கையிலும் செல்வம் நிறைந்த ஆலயங்கள் உள்ளன.

16ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட பராக்கிரமபாண்டியன் என்பவன் தென்காசியில் சிவாலயம் ஒன்றை எழுப்பி முடிக்காதுபோனான். தொடர்ந்து அத்திருப்பணி செய்வாரை வேண்டி அம்மன்னன் எழுதிய பாடலில்,

'சேர்வறிய தென்காசி ஆலயம் தெய்வச்
செயலாலே சமைந்தது இங்கு என் செயலல்ல
அதனை இன்னும் விரிவு செய்தே புரப்பார்
அடிவீழ்ந்து, அவர் தம்பால் ஏவல செய்து பணிவேன்"

என்று திருப்பணி செய்வாரைப் பணிந்து வேண்டிய முறை நம நெஞ்சை உருக்குகின்றது.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையாரும அடியேனும் இத்திவ்விய பாடலை மனதில் வைத்து திருக்கேதீச்சர ஆலயமும் தெய்வச் செயலாலே சமைந்தது இங்கு எம் செயலல்ல, அதனை இன்னும் விரிவு செய்தே புரப்பார் அடி வீழ்ந்து, அவர் தம்பால் ஏவல் செய்து பணி செய்வோம், என நாமும் வாயாரப் பணிந்து இத் திவ்விய திருப்பணியைத் தொடர்ந்து செய்யுமாறு எமது நாட்டின் சைவ மக்கள் மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு ஆகிய நாடுகளின் சைவ மக்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
20-9-76

இ: நமசிவாயம்
கௌரவ செயலாளர்

## பரிசுத் தினம்

யாழ். இந்துக்கல்லூரி பரிசுத் தினம் 28-9-76 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நிகழும். இ. ப கழக யாழ் வளாகத் தலைவர் கலாநிதி கைலாசபதி அவர்கள் பரிசளிப்புப் பேருரை வழங்குவார்கள் திருமதி சர்வமங்களம் கைலாசபதி பரிசில்களைவழங்குவார்கள்.

## நவராத்திரி விழா

நீராவியடி ஸ்ரீ ஐயன் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி காலங்களில் தினமும் இரவு 7மணி முதல் விசேட அபிடேகம், பூசை என்பன நடைபெறும். விஜயதசமி அன்று நண்பகலுக்கு மேல் மகிடாசுரவதம் விழா நடைபெறும். விஜயதசமி அன்று வித்தியாரம்பம் செய்தற்குரிய வசதிகளும் ...



சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகலகலா வல்லியே.

x x x

கண்ணிய துன்புகழ்
கற்பதுன்னாமம் கசிந்து பத்தி
பண்ணிய துன்றிருப் பாதாம்
புயத்திற் பகலிரவாய்
நண்ணிய துன்னை நயந்தோரை
வையத்து நான் முன்செய்த
புண்ணிய மேதயமே! புவி
யேழையும் பூத்தவளே.

வண்ணை: வெங்கடேச பெருமாள்

## பெருந் திருவிழா

வண்ணை திருவெங்கடேச வரதராஜப் பெருமாள் பெருந்திருவிழாக்கள் இன்று (24 9-76) பகல 10-15 மணிக்கு துவஜா ரோகணத்துடன் ஆரம்பமாகி. தொடர்ந்து அடுத்த வெள்ளி வரை நடந்து 2-10-76 சனி வாரம் பகல் 10 45 மணிக்கு சித்திரத் தேர் உலாவும், 3-10-76 ஆதிவாரம் பகல் 12 மணிக்கு ஸ்ரீ சந்திர புஷ்கரிணியில் தீர்த்த விழாவும் கருடச்சேவையும் திருவோணதிருபூஜை, மகாயாக கும்ப அபிஷேகம், இரவு துவஜ அவரோகண அநுக்கிரக சந்திர பிறை உலாவும், அடுத்தநாள் திருக்கல்யாண விழாவும் நிகழும்.

இவ் விழாக்கள் பகல் 12 மணிக்குள்ளும் இரவு 10 மணிக்குள்ளும் நிகழும

## காரை இந்துக் கல்லூரி

காரைநகர் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வலுநர்ப் போட்டி 24.9-76 புதனயிற் பகல் ... 0 மணி முதல் நிகழும்.

யாழ் பொது நூலகத்தில்
200 ஆண்டு நட்புறவு

# பொருட் காட்சி

இலங்கை - அமெரிக்கா இருநூறு ஆண்டுகள் நட்புறவு எனும் பொருட்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது கடந்த இரண்டு நூற்றாண்டு காலமாக இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையில் நிலவி வந்த நட்புறவை புகைப் படங்கள், புத்தகங்கள் மற்றும் பொருட்கள் மூலம் விளக்கும இப் பொருட்காட்சி, இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு ஜோன். எச். ரீட் அவர்களால் இம்மாதம் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை யன்று யாழ்ப்பாண பொது நூலக மண்டபத்தில் திறந்து வைக்கப்படும்.

(வளர்ச்சி 2ஆம் பக்கம்)

## சபைச் செய்தி

தலைவர். செயலாளர். பொருளாளர் காலியான பதவிகளுக்கு முறையே திரு ச செல்வராசா அவர்கள், திரு. க சிற்றம்பலம் அவர்கள் திரு. வை. சி. செந்தில்நாதன் அவர்கள் ஆகியோர் நிருவாக சபையாரால் நியமிக்கப்பெற்றனர். சென்ற பொதுக் கூட்டத் தொடர்ச்சி 10 -10 -76 இல் நிகழவிருக்கின்றது,

## திருஞான சம்பந்தர் திருக்கல்யாணப் படிப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் பெரியபுராண படனத் தொடர்பில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கல்யாணப் படிப்பு 22,9.76 புதன் கிழமை விசேட பூசையுடன் நிகழ்ந்தது. சைவப்பெரியார் திரு சி. தமபிஐயயா, கரவெட்டி ஆசிரியர் திரு .வ. மூநேசு பூநகரி பேரம்பலச்சாமியார் வைத்தியகலாநிதி நா. கனகரத்தினம், இளைப்பாறிய ஆசிரியர் திரு த தருமலிங்கம் ஆகியோர் பங்குபற்றி படிப்பைச் சிறப்பித்தனர்.

## நவராத்திரி கால விரிவுரைகள்

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளின் நவராத்திரிகால விரிவுரை நிகழ்ச்சிகள் வருமாறு:—

யாழ். ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை "அபிராமி பதிகம்" இன்னிசை தொடர் விரிவுரை.

x x x

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நிகழும் நவராத்திரி விழாவில் இன்று ஆசியுரை வழங்குவார்கள்.

x x x

வண்ணை ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோயில் பெருந் திருவிழாவில் இன்று முதல் தினந்தோறும் இரவு 7-45 மணி முதல் 'பகவத் கீதோ உபதேசம்' இசைவிரிவுரை.

x x x

கோப்பாய் ஆசிரியகலாசாலையில் 29-9 76 பிற்பகல் விரிவுரை.

x x x

30- 0-76 வியாழன் பி. ப. யாழ். மத்திய கல்லூரியில்.

## ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில்

தினமும் மாலைப் பூசையுடன் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## சைவமகாசபையில்

குருநாகல் சைவ சபையினர் கடந்த 47 ஆண்டுகளாக நடாத்தி வரும் வருடாந்த நவராத்திரி விழா இவ்வாண்டு இயல் இசை விழாவாக நடைபெறும 24 9-76 தொடக்கம் 1-10-76 வரை நடைபெறும் இவ்விழாவில் திருமதி வசந்தா வைத்தியநாதன், உதவி அரசாங்க அதிபர் வை. சொக்கலிங்கம், வைத்திய நிபுணர் பன்னமுலை ந சுப்பிரமணியம், மஹாஜனாஸ் கல்லூரி அதிபர் திரு P.S, திருச்செந்தூரான் ஆசிரியர் திரு சி. மகாலிங்கம் ஆகியோரது சிறப்புரைகளும் இலங்கை வெளிபரப்புக கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. A K. கருணாகரன், சங்கீதபூஷணம் பொன்னுலை சு. பணபதிப்பிள்ளை சங்கீதபூஷணம் திரு. ஐ வேலாயுதபிள்ளை ஆகியோரது இசை விருந்தும் தாவடி கல்யாணி வடிவேலு குழுவினரின் வில்லிசையும் குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் நடன நிகழச்சியும் இடம்பெறும இவ் விழா ஒழுங்குகளை திரு மு. இராமலிங்கம மேற்கொண்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே:
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஆடு புரட்டாதி மீ அ-உ வெள்ளி

## வல்லமை வரம் வேண்டி வழிபடுவோம்

கன்னி இராசியில் இரவி சஞ்சரிக்கும் காலம் கன்னியாய்க் கருணை தரும் அன்னையின் வழிபாட்டுக்குரிய விசேட வேளைகளில் ஒன்று. இத் திங்களிலே சத்தி பூசை செய்து உத்தம சித்திகளைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் அடைந்த இருடிகள் முனி புங்கவர்கள் பலர். எனவே பரம்பரைப் பண்பாக வுள்ள நவராத்திரி விழா சைவ உலகுக்கோர் சால்புச் சிறப்புத் தகைமை வாய்ந்தது என்று கூறுவர் அறிஞர்.

புரட்டாசித் திங்களில் நிகழும் புண்ணிய புனித காலமாம் ஒன்பது இரவுகளும் அருள் பொலிந்து விளங்கும் பெற்றியை மக்கள் நன்குணர்வார்களேயானால் இவ் வேளையில் அன்னை வழிபாட்டின் மூலம் ஆற்றல் பெற்று மனித குலம் மாண்புடன் வாழ நன்னெறி செல்லக்கூடியதாயிருக்கும்.

இன்று மனிதன் பண்பால் பழக்க வழக்கத்தால் பயிற்சியினால் செம்மை மறந்து தீய வழியிற் செல்கின்றான். பொல்லாங்கு புரிவதையே பொழுது போக்காகக் கொண்டிருக்கும் மனிதன் மாநிலம் முழுவதும் அகங்காரம் அறியாமை என்னும் அந்தகாரத்தில் அழுந்தி அலமந்து துயரமுறத் தூண்டுகின்றான். ஆற்றல் என்றால் அது எதற்குப் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதை அறிகின்றானில்லை. அணுவைப் பிளந்து ஆக்க வேலையில் முற்படாது அழித்தற் றொழிலிலே முனைந்து நிற்கின்றான்.

எனவே சைவ சமயிகளாயுள்ளவர்கள் வழிபாட்டினால் வாழ்க்கை முறையை வளமுற வைக்கலாம் என்று நாம் எப்பொழுதும் எடுத்துக் காட்டி வருகின்றோம். விரத காலம் மேன்மையானது. வேண்டிய வரங்களைப் பெற உதவுவது என்று சமய சாத்திரங்களும் தோத்திரங்களும் கூறிய வண்ணமாயிருத்தலை நினைவு கூர வைத்து நவராத்திரி காலத்தில் நல்லாற்றல் பெற நாமெல்லோரும் நோன்பிருத்தல் அவசியமெனக் காட்டுகின்றோம்.

வீரமும், விளைவளமும் விவேகமும் வெற்றியும் பெற வைக்கும் விரதம் அன்னையைத் துர்க்கையாகவும், என்றும் இலங்கும் செல்வம் நல்கும் இலக்குமியாகவும், கல்வியே கருந்தனம்' என்று புகட்டும் கலைவாணியாகவும் வணங்கி வாழ்வாங்கு வாழ வழி வகுப்போமாக.

---

## அநுதாபத் தீர்மானம்

சைவபரிபாலன சபையின் 8-9-76 புதன்கிழமை நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் அண்மையில் சிவபதம் அடைந்த திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்கள் பிரிவு குறித்து நிறைவேற்றப் பட்ட அநுதாபத் தீர்மானம் :-

“ திரு. சோமசுந்தரம் அவர்கள் சிறந்த சைவ சீலர் அவர் 89 ஆண்டுகள் புகழுடன் வாழ்வாங்கு வாழ்ந்தவர். நீதிநெறி வழுவா நேர்மையான சட்டத்தரணி. சைவ இயக்கங்களிலும் சமுதாய இயக்கங்களிலும் பல பொறுப்பான பதவிகளை வகித்து திறம்படக் கடமை ஆற்றியவர். திருக்கேதீச்சரத்தில் சேர், கந்தையா வைத்தியநாதன் விட்டுச் சென்ற திருப்பணியைத் தொடர்ந்து ஆற்றி கேதீச்சரப் பெருமானின் மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நிறைவேற்ற உதவியவர், அன்னாரது பிரிவு சைவ உலகத்திற்கு ஓர் பேரிழப்பு ஆகும். அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.”

இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

இந்த அனுதாபத் தீர்மானத்தை அன்னாரது குடும்பத்தினருக்கும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையினருக்கும் அனுப்ப வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

---

# வடபகுதி ஊழியர்கள் சேவை மகத்தானது

## திரு. கந்தப்பிள்ளை உபசார விழாவில் யாழ் அரசாங்க அதிபர் உரை

“வடபகுதியில் சேவையாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அரசஊழியர்கள் பொறுப்புணர்ந்து தமது சேவையை நன்கு செய்து இருக்கிறார்கள் இப்படியான ஊழியர்களில் தலைசிறந்தவர்தான் ஓய்வுபெற்ற திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள திரு. கந்தப்பிள்ளை அவர்கள பிரதிமைப் படத்தை வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை திறந்துவைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் காரியதிகாரியில் முப்பதாண்டுகள் பெரும்பணிபுரிந்து ஓய்வு பெற்ற உதவிஅரசாங்க அதிபர் திரு. வ. கந்தப்பிள்ளையின் சேவையைப் பாராட்டி வலிகாமம் கிழக்குப்பகுதிப் பொதுமக்கள் எடுத்த பாராட்டுவிழாவில் உரையாற்றிய வடபகுதி அரசாங்க அதிபர் திருவாளர் விஜயபாலா மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதிபதியுமான திரு. செ. நடராசா தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில நடைபெற்ற இப்பெரு விழாவில இணைச்செயலாளர் ஆசிரியர் திரு அ. பஞ்சாட்சரம் பேசுகையில “நாட்டுக்கு நற்பணி புரிந்து ஓய்வு பெற்ற திரு. வ. கந்தப்பிள்ளை அவர்களது பிரதிமைப் படத்தை வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் திறந்து வைத்திருப்பது சரித்திரத்திலேயே முதன்மையான இடத்தைப் பெறுகிறது என்றார். பண்டிதர் சி. முருகேசு பாராட்டுப்பத்திரத்தை வாசித்து வழங்கினார்.

தேசியப்பேரவை உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள் வலி கிழக்கில் காரியாதி காரியாலயப் பணிபுரிந்த ஒன்பதாண்டுகளில பொதுமக்களில் இருந்து ஒரு சிறு முறைப்பாடு கூட வந்ததில்லை. சமுதாயத்துக்கும சமயத்துக்கும் பெருந்தொண்டாற்றிய திரு. கந்தப்பிள்ளை அவர்கள் சட்டத்துக்கு அமைவாகவே கதையும் சொல்லும் இயல்பினர் சரியாகவே செய்வார். அந்த நேரான பிடியில் இருந்து அவரை யாருமே வளைக்கமுடியாது நல்ல வல்லவராக இருப்பதும் வல்லவர் நல்லவராக இருப்பதும் மிகவும் அரிது திரு. கந்தப்பிள்ளை அவரோ நல்லவரும் வல்லவருமான சிறந்த நிர்வாகி, நல்ல மனுஷன் திரு. கந்தப்பிள்ளை அவர்களது நற்சேவைக்கு என்றும் உதவியாய் இருக்கும் அவரது மனைவியார் பாராட்டுக்குரியவர் என்றார்.

வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களும், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு வ. க. ஈசுவரபாதம் அவர்களும் திரு. கந்தப்பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

திருவாளர்கள் தி. முருகேசம்பிள்ளை, தி. பரமானந்தராசா, சி. செல்வத்துரை, கே. எஸ். சோமசுந்தரம், க. இ. குமாரசாமி திருமதி சிவதவல்லி கந்தையா உட்படப் பலர் பாராட்டுரை வழங்கியதையடுத்து இணைத் தனாதிகாரிகளான திருவாளர்கள் க. கனகலிங்கம் திரு. ந. பாலகிருஷ்ணன் ஆகியோர் திரு. வ. கந்தப்பிள்ளை தம்பதிகளுக்கு வலிகாமம் கிழக்குப் பொதுமக்கள் சார்பில அன்பளிப்புச் செய்தனர்.

ஈற்றில் திரு. வ. கந்தப்பிள்ளையின் பதிலுரையையடுத்து விழாச் செயலாளர் திரு. த. கமலநாதன் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

---

## நூலரங்கம்

### கௌரியம்பாள் பிள்ளைத் தமிழ்

நூலாசிரியர்;
பேராசிரியர்
. சதாசிவம்பிள்ளை

பதிப்பாசிரியர்
வித்துவான்
சி. ஆறுமுகம்

“பழன மருங்கிற் பாலாவி பாயு மறுகிற் கேதீசர் பாகம் பயிலும் பசுங்கிளி” யாம் எமைக் காக்கும் கௌரி நாயகியைப் பிள்ளைத் தமிழ்ப் பழம் பாரின் கலைமகளை நோக்கிக் காக்க வேண்டுகின்ற ஆசிரியர் இவ்வாறே திருமால், கைலாச நாதர், திருமகள் துர்க்கை, முறிகண்டி விநாயகர், கதிர்காம வேலவர், தேவேந்திரன், சப்தமாதர் முப்பத்து மூக்கோடி தேவர் யாவரையும் அழைக்கும் பா அணி தனிப்பாங்காய் மிளிர்கின்றது.

காழியர்கோன் ஆரூரன் தந்த திருப்பதிகங்கள் உலகு உய்யப்பாடிய தமிழாம் என்றரிய கருத்தைத் தொகுத்த ஆசிரியர் 'மாந்தைக் கையிற் கேதீசர் கண்ணின் மணியாயாடு கன்னியே.... தெய்வக் கொழுந்துநீ . செங்கை தூக்கிச் சேடியர்கள் மகிழ்வுறச் செங்கீரையாடியருளே” என்று உள்ளம் உவந்துருகப்பாடி “சதுர் மறை தந்தருள் கௌரியிளங்கொடி தாலோ தாலேலோ என்று தாலாட்டுப் பருவம் அமைத்து “கேதீசர் வழி கண்டு களிக்கச் சப்பாணி கொட்டியருளாயே” என்று வேண்டிக் கொண்டு சிவனுரிடத்துறைமர் கௌரியம்மை திருவாயின் முத்தம் அருளே எனப்பணிந்து மறியும் திரைநீர் பாலாவி அருகு வருக என்று வரவேற்று “அத்தனருளுருவாய் அம்மையுடனயலமர்ந் தம் புலீ யாட வாவென்று” விழைந்து.

அரிபிரமரறிவரிய அமலனிடமமர் கௌரியம்மானையாடி அருளே எனக் கோரி, பரமசிவனருளுநகில வருகௌரி பொலங்கூர்ப் பாலாவி யாடியருளே என்று பரிந்து பூந்தராய் வேந்தரமு மூலைசுரந்தருள் கௌரிபொன்னூசல் ஆடி அருளே எனப் போற்றும் புலவரது தெள்ளுதமிழ் உள்ளத்தை பற்றிய வண்ணம் அமைந்துள்ளது.

அப்பனையும் அன்னையையும் அப்படியே அகத்திருத்தி திருவுருக்கொண்டு செப்பிய இத தமிழ்மாலை செந்தமிழுக் கியலபான தித்திப்பும செம்மையும் பொலிந்து விளங்குகின்றது.

பண்டிதமணி கூறியாங்கு திரு. சதாசிவம்பிள்ளையின் தவப் பேறுதான் என்னையோ!

அழகிய தமிழ், அழகிய அமைப்பு, அழகிய பதிப்பு, பதிப்பாசிரியர் (வித்துவான் சி ஆறுமுகம்) தொண்டுதம் நூலாசிரியரின் மாணாக்கர் என்ற பான்மையராகையால, விதி முறை வழுவா வெளியீடாயிற்று.

பேரா சிரியர்செய்
பிள்ளைத் தமிழ்ச்சாற்றின்
சீரார் திறம்சைவ
சித்தாந்தம் — பேரார்
திருக்கேதீச் சன்வாமம்
சேர்கௌரி அன்பின்
பெருக்கேயாம்
என்னேஇப் பேறு.

---

### யாழ். பொது நூலக . . .

[1ம் பக்க வளர்ச்சி]

அமரிக்க தகவல் இலாகா ஒழுங்கு செய்துள்ள இப் பொருட்காட்சியை பொதுமக்கள் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி சனிக்கிழமை முதல் அக்டோபர் மாதம் 9-ம் தேதி வரை, திங்கட்கிழமை, போயா தினம் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை பார்வையிடலாம்.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமிடையில் உத்தியோக ரீதியில் ஏற்பட்ட தொடர்புகளும், இன்று வரை இடம்பெற்ற ராஜதந்திர, வர்த்தக உறவுகளும், மற்றும் பொருளாதார, கலாச்சார கல்வித் தொடர்புகளும் பொருட்காட்சியில் விபரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

### நல்லியக்கச் சபையில்

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை ஆதரவில் [2ஆம் ஆண்டு நவராத்திரி விழாவும்] தேவார சங்கீதத் தெரிவுப் போட்டி 2-10-76-ம் இறுதிப் போட்டி 3-10-76 ம் நிகழும். சபை அரங்கில் நிகழும் இவ் விழாவுக்கு செல்வி. புஷ்பா செல்வநாயகம் தலைமை வகிப்பார் இசைநிகழ்ச்சிகள் நிகழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வழிபாடு

சைவப்புலவர் வ. சுப்பிரமணியம்

(முன் வளர்ச்சி — 3)

இதுகாரணம் பற்றித்தான் ஆலயங்களில் ஐந்து பிரகாரங்களும் (வீதிகளும்) ஐந்து வாசற்படிகளும் அமைக்கப்படுகின்றன. மேற்குறிந்த பஞ்சகோசங்கள் முறையே:

(1) கல்சுவர் (2) பளிங்குச் சுவர் (3) பாம்பின் (தோல்) சட்டை போன்ற மெல்லிய சுவர்; (4) இரவைச் சல்லாச்சுவர் (5) அதைவிட அதி நுட்பமான சுவரைப்போல் இருக்கின்றன. ஆலயத்தின் கண் உள்ள முதற் பிரகாரத்தை வலம் வந்தால், அன்னரசத்தால் சமைக்கப்பட்ட தூலதேகத்தைக் கடந்தவர்களாகிறோம். இரண்டாம் வீதியில் கணபதி வீற்றிருக்கின்றார். ஆலயத்துள் சென்றவுடன் நாம் கணபதியை (பிள்ளையாரை) வணங்கவேண்டும் ஏனெனில், ஆறு தாரங்களுக்கும் மூலாதாரமே பிரதானம்; அம்மூலாதாரக் கடவுள் கணபதியே; அவருக்கு விக்கினேஸ்வரர் என்னும் நாமமுண்டு; நம்முடைய பத்திக்கு யாதொரு விக்கினமும் வாராதபடி அருள் புரிவார். இதுபற்றித்தான் கணபதியை முதல் வணங்க வேண்டும்.

இன்னும் பலிபீடம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது பலி என்றால் நிவேதனம்; பீடம் என்றால் இடம். ஆணவ மலத்தை பலியிட்டு (அதாவது நீக்கிவிட்டு) பின்பு உட்செல்ல வேண்டுவது விதி. நந்தி தேவர் மூலத்தானத்திற்கு நேர்முகமாக அமைக்கப்பட்டிருக்கின்றார்; இப்படி அமைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், ஆன்மா கடவுளை நேர்முகமாக நோக்கிச் சொல்லவேண்டும் என்பதை உணர்த்துதற்கே. ஐந்து கோபுரவாயில்களிலும், முதல் வாசப்படி அகன்றதாயும், இரண்டாவது கொஞ்சம் குறுகியும், மூன்றாவது, அதைவிடக் கொஞ்சம் குறுகியும், நான்காவது அதைவிடக் கொஞ்சம் குறுகியும் ஐந்தாவதாகிய, மூலத்தானவாசற்படி எல்லாவற்றைவிடக் குறுகியும் இருக்கும் இவ்விதம் அமைக்கப்பட்டிருப்பது, முதல் வாசப்படியைக் கடந்து பிராணமயகோசத்தையும், 2 வதுவாசற்படியைக்கடந்து மனோமய கோசத்தையும் 3-வது வாசற்படியைக் கடந்து விஞ்ஞான மயகோசத்தையும், படிப்படியாய் அடைந்து, கடைசியில் நான்காவது வாசற்படியைக்கடந்தால், ஐந்தாவது வாசலின் உள்ள ஆனந்தமயகோசத்தை அடைந்தவர்களாகிறோம்என்பதைக் குறிக்கிறது இறுதியில் சுவாமி சன்னிதானத்தை அடைந்தவுடன் நாம் ஈசுரனையே, பூரண பக்தியுடன் வணங்கல் வேண்டும். (வளரும்)

## கல்வித் திணைக்களத்தில்

வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினர் 30-9-76 வியாழன் பி. ப. 2 மணி முதல் வாணி விழாக் கொண்டாடுகின்றனர். மங்கள இசையை அடுத்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரைநிகழ்த்துவார்.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இல.7881

தொண்டைமானாறு ஐயாச்சாமி தியாகராசா வழக்காளி

எதிராக

தொண்டைமானாறு 1. வயிரவனா சர்வானந்தனும்

மரணம்) 2. பெண் மகேந்திரமணியும்

மேறட்டியூர் 3. கிட்டினன் சிவகுரு

2A சர்வானந்தன் கஜேந்திரன்

3B சர்வானந்தன் மகள் நவரஞ்சினி

2C சர்வானந்தன் மகள் மனோரஞ்சினி

2A தொடக்கம் 2C வரையுமுள்ளவர்கள் பராயமற்றவர்கள் அவர்களின் பராமரிப்புசகரன் 1ம் எதிரி எதிரிகள்

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1976 ஹூ ஐப்பசி மீ 18-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று கெருடாவிற் குறிச்சியிலுள்ள "பிடாரித்திடல்" நிப 50 தொண்டைமானாறு இறை "பிடாரியத்திடல்" நிப 3,7/8 இதில் வடக்கெல்லைசிக்க நிப:1 குளி 16,7/8ம் கூடிய நிப 6 குளி 16,7/8 இதில் வடக்கனைவாசியில மேற்குப்புறமாக நி.ப. 1 குளி 11.27/32 நீக்கி மிகுதிக்கு நி.ப.1 குளி 14,19/32 எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு கையொழுங்கை, மேற்கு ஆறுமுகம் பெண் தங்கப்பொன்னுவுக்குடைய வாதனம் தெற்கு ஆண்டி கிட்டினனுக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள வீடு கூரை அடங்கலிர செம்பாதியும் அரைவாசியும்.

| | | |
|---|---|---|
| நரட்த் தொகை | ரூபா | 2713-32 |
| ரூபா 2000/-க்கு 6-8-1963 தொடக்கம் | | |
| 26.8.1964 வரை 12 வீத வட்டி | ரூபா | 250.00 |
| ரூபா 2943/-க்கு 27-3-1964 தொடக்கம் | | |
| 26-6-1970 வரை 5வீத வட்டி | ரூபா | 846.11 |
| | | 3809.43 |
| 24-6-1970 கொடுக்கப்பட்ட | ரூபா | 2000-00 |
| | | 1809.43 |
| ரூபா 1809-43க்கு 25.6.70 தொடக்கம் | | |
| 25 2-1976 வரை 5வீத வட்டி | ரூபா | 484-43 |
| கணிக்கப்பட்ட செலவு | ரூபா | 294.34 |
| | ரூபா | 2587-20 |
| ரூபா 2587-20 க்கு 26-2-76 தொடக்கம் | | |
| 26-4-76வரை 5வீத வட்டியும் | ரூபா | 1000-00 |
| கோட்டால் ஏற்கப்பட்ட விலைமதிப்புத்தொகை | ரூபா | 1587-20 |

ரூபா 1587-20க்கு 26-4-76 தொடக்கம் 18-10-76 வரை 5வீத வட்டி

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை,
50 17-9-76

**R. S. இராமநாதன் J. P**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales, Valuer
and Auctioneer.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. 11587

1. தாமோதரம் அரியநாயகம்
2. பெண் தெய்வானைப்பிள்ளை, துன்னாலை வடக்கு

எதிராக வழக்காளிகள்

1. மார்க்கண்டு சோமசுந்தரமூர்த்தி
2. கைம்பெண் சிவபாதம். துன்னாலை தெற்கு

எதிராளிகள்

பருத்தித்துறை மாவட்டக் கோட்டின் வழ. இல 11587-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்விபரிக்கப்படும் ஆதனம 1976-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ம் திகதி (10-11-76) புதன் கிழமை காலை 10-00 மணியளவில் அவ்வாதனத்துள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

மேற்சொல்லிய அட்டவணை

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வடமராட்சிப் பகுதி கட்டவேலி கோவில்பற்று

1, துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியிலுள்ள அத்தாய் இதற்கு உலாந்தா மேஸ்தர் க. கணபதிப்பிள்ளையால் 1927-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம தேதி 4933 ஆம் இலக்கத்தில் வரைந்தரிக்கப்பட்டு 1927-ஆம் ஆண்டு ஆடி மாதம் 6-ம் தேதி நொத்தாரிஸ் சி. தம்பிமுத்து மூகதாவில் 4 855ம் இலக்கத்தில் முடிந்த பிரிவிடை உறுதியோடணைக்கப் பட்டிருக்கு படத்தின்படி நி பர, 10 குளி 3,7/32 இதில் குறித்த படத்தில 3-ம், 4-ம் துண்டுகளுக்கு (நி. பர 5, குளி 6, 14/32) நி. பர ஐந்து குளியாறுடன மூ பத்திரெண்டில் பதின்நான்கு எல்லை கிழக்கு தெருவும், பின்னுற்காணும் 2-ம் ஆதனமும், வடக்கு கணபதி நாகனுக்கு மறுபேருக்குமுடைய ஆதனம் மேற்கு நல்லையா பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் தெற்கு கணபதி நாகனுடைய வாதனம் இது முழுவதும முழுக்காணிக் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரிமையும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப் பட்ட விலை மதிப்பு ரூபா 6000

2. மேற் சொல்லிய 1-ம் காணியில் மேற் சொல்லிய 4933-ம் இலக்கப் படத்தில் 5-ம் துண்டுக்கு குளி (9) ஒன்பது எல்லை கிழக்கு தெரு வடக்கும் மேற்கும் தெற்கும் மேற் சொல்லிய முதலாம் ஆதனம் இதற் செம்பாதியாய அரைவாசியும் முழுக்காணிக் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலுரிமையும், இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா, 150.

3, துன்னாலை தெற்கிலுள்ள "சூடுவெந்ததூ" என்று அழைக்கப்படுவதும் 1903-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 1-ம் தேதியைக் கொண்ட 2084 6 இலக்க ரயிற்றின் பிளானில் சொல்லியதுமான காணி அதன் விஸ்தாரம் ஏக்கர் 4, றூட் 2 இதுவும் இதற்குத் தெற்குப்புறமாக உள்ள சூடுவெந்தா என்று அழைக்கப்படுவதும் 1926, ஆவணி, 26-ம் தேதியைக் கொண்டதும 36117-ம் இலக்க ரயிற்றின் பிளானில சொல்லியதுமான காணி இதன் விஸ்தாரம் பேட்சு 13.இதுவும் சேர்ந்த காணியின் விஸ்தாரம் (4 ஏ, 2 றூ, 13பே,) ஏக்கர் 4, றூட் இரண்டு, பேர்ச்சு பதின்மூன்று பனைகள், வடலிகள், தென்னைகள மேவும் புகள கிணறும எல்லை கிழக்கு சங்கரன வல்லிபுரத்திற்கும மறுபேருக்குமுடைய வாதனம வடக்கும தெறகும் மூடிக்குரிய வாதனம் மேற்கு ரோட்டுக்களுக்காக விடப்பட்ட நிலம இவ்வெல்லைக் குட்பட்டவைகள் முழுவதும், இதற்கு கோட்டால அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா. 4000

| | |
|---|---|
| 1. தீர்வைத்தொகை | ரூபா 10420 -00 |
| 2 ரூபா 6000—க்கு 28 10.71 தொடக்கம | |
| 10 5.72 வரைக்கும் 8 வீத வட்டி | 253 -00 |
| 3. ரூபா10673.00க்கு 11.5.72 தொடக்கம் | |
| 13.10.75 வரைக்கும 5 வீத வட்டி | 1822- 00 |
| மொத்தம் | 12495 -00 |
| 4, 13.10.75 கொடுபட்ட பணம் | 4000 -00 |
| | 8495 - 00 |
| 5, ரூபா 8495-00க்கு 4-10-75 தொடக்கம் | |
| 22.7 76 வரை 5 வீத வட்டி | 318 -00 |
| 6. கோட்டுச்செலவு ரூபா 3 8 40 | |
| கொடுக்கப்பட்டது 175-00 | |
| | 143 40 |
| 1976-7-22 வரும்தியான மொத்தப் பணம் | 8956-40 |

ரங்கமேல் ஆலயம்,
சந்நிதி லேன்,
பருத்தித்துறை 26-8-76

**கா. முத்துக்குமாருரையர்**
நீதிமன்ற ஆணையாளரும்,
கொமிஷன் விலைமதிப்பாளரும்
64 17-9

## சேர். கந்தையா வைத்தியநாதனும் திருக்கேதீச்சரமும்

அருள். தியாகராசா

(முன்வளர்ச்சி - 5)

சேர். வைத்திய நாதன் அவர்கள் 11 ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூரில் கந்தப்பெருமானின் தேர் தீர்த்த விழாக்களில் கலந்து கொண்ட பின்னர் திருக்கேதீஸ்வரம் தனது தர்ம பத்தினியுடன் சென்றார் அப்பொழுது அவருக்கு ஓர் உபாதி ஏற்பட்டது. அது ஏற்பட்ட சில மணி நேரத்தில் உவரது ஆன்மா கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானின் திருவடியை அடைந்தது, அவர் உயிர்பிரிவதற்குச் சில நிமிடங்களுக்குமுன்னர்தனது வாழ்க்கைத் துணைவியை அழைத்து நான் விரும்பிய பணி நிறைவேற நீயும் உழைத்துவர வேண்டும்; இவ்வாலயத்தின் இராஜகோபுரத்திருப்பணி நிறைவு பெறும் நாளே என் மனம் சாந்திபெறும நாள்; எனது பணியில் நீ தொடர்ந்து உழைத்துவர வேண்டும் என்று சொல்லு என வாக்குறுதி பெற்றுக் கொண்ட பின்பே அவர் அமைதியடைந்தனர். பெரியாரவர்களுக்கு திருப்பணி மீதிருந்த பற்று எவ்வளவு என்பதையிது காட்டுகிறது. அவர் வகுத்த திட்டங்கள் நிறைவேற திருப் பணிச் சபை அயராதுழைத்துவருவது பெருமை தருவதாகும். திரு. வைத்தியநாதன் அவர்கள் பெயரைச் செப்பேட்டில பொறித்து உரிய இடத்தில் வைக்கவேண்டுமென சிவ தொண்டர்கள் உளமுருகச்சொல்வதைப் பலகாலம் கேட்டிருக்கிறேன். அவருக்கு இத்தலச்சூழல் புனித நகராக வேண்டு மென்ற ஆசையிருந்தது இது நிறைவேற வேண்டியதொன்றாகும்.

———

## பனம்பழத் தோசை

— சு. பரநிருபசிங்கம் B. Sc. —

### தேவையான பொருள்கள்

தும்பு நீக்கிய பனங்களி ஒரு சுண்டு.

வசதிபோலக் கைவசம் உள்ள மா ஒன்றரைச் சுண்டு.

(கோதுமை. அரிசி மா, குரக்கன் மா தினை மா, சோழன் மா, மரவள்ளி மா எதுவாயினும் நல்லது.)

### செய்முறை

பனங்களியைப் பிசைந்து சீலைதுணியில வடிந்தெடுத்து எலுமிச்சம்பழப் புளிவிட்டுக் கொதிக்க வைக்கவும். இதனால் காறல் நீங்கிவிடும். கொதிக்க வைத்த களியை இறக்கி, ஆறவிட்டு ஏதாவது மாவைக் கொட்டிக் குழைத்துப்பிசைந்து புளிக்க வைக்கவும். மறுநாட் காலை அளவான உப்பிட்டு நீர்விட்டுக் கரைக்கவும். மிளகு சீரகம் பொடியாக்கிச் சேர்த்துக்கொண்டால சுவை அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய வண்ணம் தாளிதஞ் செய்து போடலாம். அல்லது வெண்காயம், மிளகாய் அரிந்து போடலாம். இங்ஙனம் தயாரித்த மாவைத் தோசைகல்லில் வார்த்துத் தோசை எடுக்கலாம். இலுப்பெண்ணெ உபயோகித்தால் நல்லது.

பனம்பழத் தோசையில் மாப்பொருள், கொழுப்புப்பொருள் புரதப் பொருள் உயிர்ச்சத்துB' கனிப் பொருள் முதலியன உண்டு.

நன்றி — மில்க்வைற் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

பரமகுரவன் பரமெங்குமாகித்,
திரமுற எங்கணும் சேர்ந்து ஒழிவற்று,
நிரவு சொரூபத்துள் நீங்கு சொரூபம்
அரிய துரியத்(து) அமைந்து நின்றானே.

The Supreme Divine Guru prevades the soul and all the world. Thoroughly does He pervade and energise them. And He shines as the Great Reality within the reality (the soul) in its pure transcendent state.

Hindu Organ

Friday, September 24, 1976

# Digging Under The Feet

To come under the control of the State? Lands belonging to all religious denominations!

Legislation to this effect is being prepared by the Minister of Agriculture and Lands — so reports the Ceylon Daily News in its front page of its issue of September 21, 1976. The source of this information is clearly suggestive of the credibility of this piece of disturbing news.

Slowly and steadily the swing away from the path of privilege inherently enjoyed as an inalienable right by religions is becoming more and more prominent, nay pointed.

From the Land Reform Law No, 1 to the proposed legislation is thus a step backward in the sense that the people of this precious little Isle who are all committed to a life of religious belief are to be denied the privileged position of their places of worship and the sacred right of these temporalities exclusively to own real property.

We do not propose to comment further on this subject basing our criticism on mere hearsay information. However, we are impelled by a religious duty to draw the attention of all religious organizations and Temple Societies to this impending and imminent encroachment on the sacred premises of religious bodies. Socialism, if it really stands for progressive welfare, (then this word) should not be wantonly invoked in matters pertaining to religious affairs; for no welfare worth the name can be worked for without the sanctity of religious temporalities b ing safeguarded.

# Non Aligned Summit Conference August — 1976

(Copies of Memoranda submitted to the Premier by the All Ceylon Hindu Congress).

We congratulate you on the successful completion of the 5th non Aligned Summit Conference held in Sri Lanka in August, 1976.

We wrote to you on the 24th of May, 1976 welcoming the holding of the non aligned summit conference in Sri Lanka and assuring the state of our full co-operation to make this a success. We at the same time requested your permission to give a reception to His Majesty the King of Nepal and the other Hindu delegates. We were informed on 25th June, 1976 that as the heads of states will spend only a few days in Sri Lanka they will not have the time to attend any receptions by private organisations. We were also informed that similar requests by other organisations have also been refused.

We then requested through the Foreign Minister of Nepal. for permission for His Majesty to visit one of the Hindu Temples in the city and offer his prayers Even this opportunity was denied to us.

We then contracted the Director of foreign relations of the Ministry of defence and foreign affairs of Sri Lanka for permission to present to the delegates a copy each of the book "A Short History — of Hinduism in Ceylon" Even this request had been refused.

Though opportunities have been given to other denominational organisations to arrange Prayers and make presentations to their denominational delegates. such opportunities have been denied to the Hindus of Sri Lanka. The All Ceylon Hindu Congress, as the representatives of the Hindus of Sri Lanka, regrets very much at the discriminatory treatment meted out to the Hindu Community of Sri Lanka.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-4-1975 with Mr P. S. Appiah of Anaikoddai Road, Kokuvil West Jaffna. On Wednesday 13-10-1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

**V. S. Cuttipillai**
Auctioneer.

"Raja Giri"
643, K. K. S. Road,
Jaffna,
(7. 24 & 1)

## Hindu Youths In Custody

Several Hindu youths are being kept in custody for very long periods without any charges being brought against them. This is not in keeping with religious principles. Though we are very strictly a non-political organisation in keeping with religious principles yet in the name of humanity we humbly request you either to release all the youths or bring them to trial for any offences commited by them.

# DEATH BEFORE DEATH

V. SUBRAMANIAM
Saiva-Pulavar

(Continued from last issue

To call this incomparable state of Bliss death is a lie; to name this life of all knowledge, death is utter ignorance; to call this state of self-luminosity, death is blindness. It is the Life in life, an eternal life of lasting Bliss and Knowledge; yet it is death as the 'I'-ness has vanished.

My brothers, one ounce of practice is worth - more than tons of tall talk; one who has experienced the death of the mind in his life teaches more by his silence than another who speaks volumes. I, among you. there is such a one I bow down before him whether he is a Buddhist, a Christian or a Muhammedan or of any other persussion. Religions and creeds are nothing, if one cannot live a spiritual life. Mere knowledge develops only one's Ahankara, should we not be able boldly to affirm when asked.

"Do any hearts beat faster. do any faces brighten to hear your footsteps on the stair to meet you, greet you, anywhere are any happier today through words they have heard you say, Life were not worth the living if no one were the better for having met you on the way and know the sunshine of your stay."

(Swami-Narayana)

Therefore, should we not all from this moment seriously consider the life we lead. Should we not make this hall a holy place for practising our spiritual ideals? Should we not infuse into our being a self-less love for all, so that with the Grace of the Lord we may with conviction each of us exclaim.

நடக்கினு மோடி நிற்கினும்,
வேறொரு நாட்டமின்றி
இடக்கினுஞ் செவ்வித்தினுக்
கினும நல்லருட் கேள்விலே
தொடக்கு மென்னெஞ்சமனமற
பூரணத் தொட்டிக்குளே
முடக்குவன்யான் டரமானந்த
நித்திரை மூடிடுமே.

"Even while walking, running, standing while lying devoid of other desires, or sitting evenly, in hearing of the Gracious, my mind will be engrossed and I, in the cradle of mindless perfection, will lie crouched and the sleep of the Highest Bliss will enshroud me."

## JAFFNA CAMPUS

Two lectures were held recently under the auspices of the South Asia Studies Seminar, at the Jaffna Campus. Mr. A. Sivanandan, Director of the Institute of Race Relations London and Editor of the Journal 'Race and Class' delivered an interesting lecture on "Race Relations and the third world."

Dr. A. W. Singham, Professor of Political Science, Howard University Washington D. C. delivered a very interesting lecture on methodological problems in the study of the third world". Both lectures were followed by useful discussions.

## Japanese Scholar in Sri Lanka

Dr Noboru Karashima, Associate Professor of South Asian History, University of Tokyo was in Sri Lanka in the early part of this month, He visited some places of historical and cultural interest including the Colombo, Peradeniya and Jaffna Campuses. Besides, history and other subjects, he is a keen student of Tamil and at the moment busy with his researches on the medieval history of Tamilnadu especially the Cola Period. He also said that it was decided at the Congress of Orientalists held in Mexico, to have the fifth world Tamil Conference at Senegal. The President of SENEGAL is much interested on having this Seminar in his country.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்குக நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 24, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org